**O.S.No. 219/2017**

**PW 1:** சண்முகம் தேதி 7.3.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

3ம் பிரதிவாதி நல்லம்மாள் 10.10.2021 ல் இறந்துவிட்டார். அவருக்கு இறந்து போன சோமசுந்தரம் மற்றும் 14 ம் பிரதிவாதி பரமசிவம் என்ற 2 மகன்கள் மற்றும் 13 ம் பிரதிவாதி சரோஜா அவர்கள் வாரிசுகள். இறந்து போன சோமசுந்தரத்தின் மனைவி 10 ம் பிரதிவாதி ஜெயமணி. 11 மற்றும் 12 பிரதிவாதிகள் மகள்கள். நல்லம்மாள் இறக்கும் போது சுமார் வயது 90 இருக்கும் என்றால் சரிதான். அவர் படிப்பறிவு இல்லாதவர். நல்லம்மாள் இறந்த பின்னிட்டு சோமசுந்தரத்தின் வாரிசுகள் 9ம் பிரதிவாதி குழந்தைசாமிக்கு அவருடைய சொத்துகளை விற்று விட்டார்கள் என்றால் சரிதான் தற்போது தான் தெரிய வந்தது. 9 ம் பிரதிவாதி 2/9 பாகத்தை கிரையம் பெற்று கொண்டார் என்றும் சரோஜாவிற்கு 1/9 பாகம் என்றும் சொன்னால் சரிதான். 20.8.2016 ல் மாரப்பகவுண்டர் லோகநாதனுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரம் செல்லாது. அது கூட்டு குடும்ப சொத்து. 1982 ல் 2ம் பிரதிவாதி தரப்பில் குடும்ப ஏற்பாடு நடந்ததாக சொல்லியிருப்பது தவறு. 4/27 பாகம் எனக்கு உள்ளதாக இவ்வழக்கில் சொல்லியிருக்கிறேன். 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கும் 9/27 பாகம் பாத்தியம் உள்ளது. எங்களுக்கு என்ன பாத்தியமோ அதே தான் 2ம் பிரதிவாதிக்கும் பாத்தியம் இருக்கிறது. மேற்சொன்ன விகிதாசாரத்தின் படி தீர்ப்பாவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

( 9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை 10, 11, 12, 14 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்று கொள்ளகிறார்கள்)